

# ஏ.டி.எம்.

## Any Time Murder

32

அகிலன் சித்தார்த்

பாண்டியன், வாப்பாவை தன்னுடைய அறைக்குள் அழைத்துச் சென்றார். சந்திரா தங்கள் ஊர் ஸ்பெஷல் கடுங்காப்பியை அவருக்கு அளித்தாள்.

"எப்படி பாப்பா இருக்க?"

"நல்லாயிருக்கேன் வாப்பா"

"பாப்பாவுக்கு காலாகாலத்துல ஒரு கல்யாணத்தைப் பண்ணிட வேண்டியதுதானே பாண்டியன்?"

"அதுதான் பார்த்துக்கிட்டிருக்கோம் பாய். ஒண்ணும் சரியா அமைய மாட்டேங்குது. சந்திரா நீ உள்ளே போம்மா"

பாண்டியன் வாப்பாவின் முகத்தையே பார்த்தார். "பாய் உங்க முகத்துல ஏதோ கவலை தெரியுது.. ஏதாவது பிரச்சினையா?"

"ஆமாம் பாண்டியன்... என் மகன் முஸ்தஃபாவோட நடவடிக்கை எல்லாம் ஒரு மாதிரியா இருக்கு.." என்று ஆரம்பித்தவர், எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தார். அதைக் கேட்ட பாண்டியன், பெருமூச்சு விட்டார்.

"ஆமாம் பாய்.. இங்கே சுந்தர்கூட ஒரு மாதிரி மந்திரிச்சிவிட்ட மாதிரித்தான் திரியுறான்.. புது பைக்கு, டிரெஸ் அது இதுன்னு பணத்தை வாரி இறைக்கிறான். வீட்டுல எங்களுக்கு என்னென்னமோ வாங்கிக் கொடுக்கிறான். கேட்டா புராஜெக்ட் ஓர்க் கிடைச்சிருக்குன்னு சொல்லுறான் பாய்.. ஆண்டனி பயதான் ஏதோ பிஸினஸ் புடிச்சிருப்பான் போலருக்கு"

"பிஸினஸ்னா ஒரு ஆஃபீஸ் இருக்கும்.. அதுக்கு தினமும் ரெகுலராப் போகணும். ஆனா நவாஸ் அப்படிப் போகிற மாதிரியே தெரியலை. சில நேரங்கள்ல ராத்திரி வீடு திரும்பறதில்லை. என்ன நடக்குதுன்னே புரியலை பாண்டியன். பயமா இருக்கு. பசங்க சரியான வழியிலதான் போறாங்களான்னே தெரியலையே"

"எனக்கும் அந்தக் கவலை இருக்கு பாய். சில சமயம் பார்த்தா சுந்தர் ஏதோ பிரமை பிடிச்சாப்ல இருக்கிறான். ராத்திரி பூரா கம்ப்யூட்டரை நோண்டிக் கிட்டே இருப்பான். முகத்துல ஒரு பயம் தெரியும். நானும் ஒரு தடவை கேட்டுப் பார்த்தேன். ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டான்"

"முஸ்தஃபா கிட்டே நானும் பேசிப் பார்த்தேன். சரியா பதில் சொல்ல முடியாமத் தடுமாறினான். என்னமோ தப்புன்னு மனசுக்குப் படுது பாண்டியன். நாமதான் ஏதாவது செஞ்சாகணும்."

"இவங்க ஆஃபீஸ் எங்கே இருக்குன்னு கண்டுபிடிச்சிப் போய் பார்க்கலாம் பாய். கவலைப்படாதீங்க. நம்ப பசங்க நல்லவங்கதான். குடும்பத்து மேல ரொம்பப் பாசமாத்தான் இருக்காங்க. 'எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. சந்திரா கல்யாணத்துக்கு உடனே ஏற்பாடு பண்ணுங்க'ன்னு சொல்லிக்கிட்டிருக்கான் சுந்தர். பயப்படும்படி ஒண்ணும் இருக்காது"

"அது சரிதான். நவாஸும் தம்பிப் பிள்ளைங்களை வேற நல்ல ஸ்கூல்ல சேர்த்து பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னுதான் சொல்லிக்கிட்டிருக்கான். இருந்தாலும் நாம சுதாரிப்பா இருக்கணும் பாண்டியன்.." - வாப்பா அவரிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டார்.

அவர் சென்றதும் பாண்டியன் சற்று நேரம் நாற்காலியில் அமர்ந்து யோசித்தபடி இருந்தார். பிறகு சுந்தரின் அறைக்குள் நுழைந்தார். கதவைத் தாழிட்டார். அவனுடைய பீரோவைத் திறந்தார். ஏகப்பட்ட புதிய உடைகள் இருந்தன. அவற்றை விலக்கிப் பார்த்தார்.

ஒரு கவர் இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தார். ஏகப்பட்ட புகைப்படங்கள் இருந்தன. எல்லாமே அவன் ஒரு பெண்ணுடன் காதலுடன் இருக்கும் படங்கள்.

"காதலிக்கிறானா? அந்தப் பெண்ணிடமிருந்து ஏதாவது பணம் வருகிறதா? யார் இந்தப் பெண்?"

கடற்கரை, மகாபலிபுரம், வள்ளுவர் கோட்டம், காந்தி மண்டபம், வண்டலூர் ஜூ போன்ற பல இடங்களில் எடுத்த புகைப்படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தார்.

"மிக நெருக்கமாக இருக்கிறார்கள். காதல் பித்து தலைக்கேறிய நிலை தெரிகிறது. பெண் கலையாகத்தான் இருக்கிறாள். நல்ல குடும்பத்துப் பெண் மாதிரிதான் தெரிகிறது. ஒன்றும் பிரச்சினை இல்லையென்றால் திருமணத்தைக் கூடப் பேசி முடித்து விடலாம்"

பீரோவின் உள் அலமாரி பூட்டியிருந்தது. ஒவ்வொரு அலமாரியாகத் தேடினார். உடைகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

கீழே தரையில் பெரிய சூட்கேஸை வைத்திருந்தான்.

"அதைத் திறந்து பார்க்கலாமா?"

இதுவரை அவர் அப்படியெல்லாம் செய்ததே இல்லை. தன் குழந்தைகளின் பர்ஸனல் விஷயங்களை அவர் ஆராய்ந்த